©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 832] CHENNAI, TUESDAY, DECEMBER 16, 2025
Margazhi 1, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2056

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a Section of the public issued by Secretariat Departments.**

**NOTIFICATIONS BY GOVERNMENT**

**INDUSTRIES, INVESTMENT PROMOTION AND COMMERCE DEPARTMENT**

ACQUISITION OF LANDS

**FORM – IV**

PRELIMINARY NOTIFICATION

***(Unit I, II And III)***

*[அரசாணை (நிலை) எண். 186, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (ஜிஐஎம்)த் துறை, 16 டிசம்பர் 2025, மார்கழி 1, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

**No. II(2)/IIPC/1313(d)/2025.**

Whereas it appears to the appropriate Government that a total of 39.06.91 hectares of land is required in the Madhavankurichi Village and Aadhiyakurichi Village in Tiruchendur Taluk and Padukapathu Village and Pallakurichi Village in Sattankulam Taluk in Thoothukudi District for public purpose, namely formation of a new road to re-route the ECR and the formation of connective road to the lands acquired for establishing a new launch station for SSLV in Favour of ISRO.

Since the land is urgently required for state highways department land acquisition either under sub-section (1) of section 40 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement (RFCTLARR) Act, 2013, or through private negotiation as ordered by G.O(Ms) No.32 of Industries, Investment Promotion and Commerce (GIM) Department, dated 12.03.2024, as stipulated under section 40(4) of the RFCTLARR Act, all sections under chapter 2, all sections under chapter 3 and sections 12, 13, 14, 15, 16, 17, 18 under chapter 4 and sections 31, 32, 39, 41 ,42 under chapter 5 and all sections under chapter 6 does not applicable to this land acquisition.

Since the project is national importance, the establishment of a new launch station for SSLV in favour of ISRO and for formation of a new road to re-route the ECR and to establish connective road to the land acquired for the establishment of a new launch station, the District Collector, Thoothukudi has been empowered to add any additional lands or any missing lands towards the land acquisition/land alienation mentioned in administrative sanction in case any need arises.

Therefore, it is notified that for the above said project in Madhavankurichi and Aadhiyakurichi Villages of Tiruchendur Taluk in Thoothukudi District, land measuring an extent of 0.22.58 hectares, whose details are specified in the Schedule below, is under acquisition in Unit I, II and III.

THE SCHEDULE.

| *Sl. No* | *Survey No.* | *Classification of land* | *Area under acquisition* | *Boundries* | | | | *Structures* | *Trees* | *Name & address of person interested* | *Registered Holder* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | *N* | *E* | *S* | *W* | | | | |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | | | | *(6)* | *(7)* | *(8)* | *(9)* |
| | | | | **Unit-I (Madhavankurichi Village)** | | | | | | | |
| 1. | 503/3A | Dry | 0.18.90 | 502 | 503/2A1 | 503/1A | 504/3, 520/1A | - | - | Balamurugan S/o.Abiraham | 1529 |
| | | | | **Unit-II (Madhavankurichi Village)** | | | | | | | |
| 2. | 171/2B | Dry | 0.03.64 | 171/2A | 171/2C | 172 | 181/2B2 | - | - | 1. Karuppadurai, S/o.Mahalinga Nadar<br>2. Vijayakumar S/o.Mahalinga Nadar | 643 |
| | | | | **Unit-III (Aadhiyakurichi Village)** | | | | | | | |
| 3. | 409/14 | Dry | 0.00.04 | 384/19 | Madhavan kurichi | 409/14, 409/15 | 409/13 | - | - | Edison S/o.Jacob | 1528 |
| **Total** | | | **0.22.58** | | | | | | | | |

This notification is made under sub-section (1) of section 11 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 (Central Act 30 of 2013), to all whom it may concern.

A plan of the land may be inspected in the office of the Collector, Thoothukudi and the Special District Revenue Officer, (Land Acquisition) SSLV Project, Thiruchendur on any working day during the working hours.

The Government is pleased to authorize the Special District Revenue Officer (Land Acquisition), SSLV Project, Tiruchendur and his/her staff to enterupon a survey land, take levels of any land, dig or bore into the sub-soil and do all other acts required for the proper execution of their work as provided and specified in section 12 of the said Act.

Under sub-section (4) of section 11 of the said Act, no person shall make any transaction or cause any transaction of land i.e. sale/purchase, etc., or create any encumbrances on such land from the date of publication of this notification in the *Tamil Nadu Government Gazette* without prior approval of the Collector.

In view of urgency of the case, the provision of hearing objections under section 15 of the said Act is dispensed with and in view of urgency of the case is become necessary to acquire immediate possession of the land specified in the schedule under the provision of the sub section (1) section 40 of the said Act.

V. ARUN ROY,
*Secretary to Government.*

### நிலம் கையகப்படுத்துதல்

### படிவம் – IV

### முதல்நிலை அறிவிக்கை

### (அலகு I, II மற்றும் III)

*[அரசாணை (நிலை) எண்.186, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (ஜிஐஎம்)த் துறை, 16 டிசம்பர் 2025, மார்கழி 1, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056.]*

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில் மாதவன்குறிச்சி, ஆதியாக்குறிச்சி கிராமங்கள் மற்றும் சாத்தான்குளம் வட்டத்தில் படுக்கப்பத்து மற்றும் பள்ளக்குறிச்சி கிராமங்களில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறியரக செயற்கைக்கோள் ஏவுதளம் அமைக்கும் திட்டத்திற்காக நில எடுப்பு செய்யப்படும் நிலங்களின் ஊடாகச் செல்லும் கிழக்கு கடற்கரை சாலைக்கு பதிலாக புதிய மாற்று சாலை அமைக்கவும் மற்றும் நில எடுப்பு செய்யப்பட்ட பகுதியுடன் கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் பொருட்டு இணைப்பு சாலை அமைக்க 39.06.91 ஹெக்டேர் நிலங்கள் தேவைப்படுவதால் உரிய அரசு உத்தேசித்துள்ளது.

2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டத்தின் அவசர கால பிரிவு 40(1)–ன்கீழ் அல்லது தனி நபர் பேச்சுவார்த்தையின் மூலம் மாநில நெடுஞ்சாலை துறைக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு, உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அச்சட்டத்தின் பிரிவு 40(4)–ன்படி 2–வது அத்தியாயத்தின் அனைத்து சட்ட பிரிவுகள், 3–வது அத்தியாயத்தின் அனைத்து சட்ட பிரிவுகள், 4–வது அத்தியாயத்தின் சட்ட பிரிவு 12, 13, 14, 15, 16, 17, 18 ஆகிய சட்ட பிரிவுகள், 5–வது அத்தியாயத்தின் பிரிவு 31, 32, 39, 41, 42 மற்றும் 6–வது அத்தியாயத்தின் அனைத்து சட்ட பிரிவுகள் ஆகியவை இந்நில எடுப்பிற்கு பொருந்தாது என அரசாணை (நிலை) எண்: 32 தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (ஜிஐஎம்)த் துறை, நாள்:12.03.2024–ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதால் சிறியரக செயற்கைகோள் ஏவுதளம் அமைக்கும் திட்டம் மற்றும் மாற்றுச்சாலை/இணைப்புச்சாலை அமைத்தல் ஆகிய பணிகளுக்காக நில எடுப்பு செய்யும்போது நிர்வாக அனுமதி வழங்கப்படும் பரப்பினைவிட கூடுதல் பரப்பினை (Additional Lands) அல்லது ஏதேனும் விடுபட்ட பரப்பினை (Missing Lands) நில எடுப்பு/நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வு எழும் சூழலில் அதனை மேற்கொள்ள சிறப்பினமாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளித்து அரசாணை (நிலை) எண்.32, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (ஜிஐஎம்)த் துறை, நாள் 12.03.2024 ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்தின் திருச்செந்தூர் வட்டத்தில், மாதவன்குறிச்சி மற்றும் ஆதியாக்குறிச்சி கிராமங்களில் மேற்சொன்ன திட்டத்திற்காக அலகு–I, II மற்றும் III–ல் 0.22.58 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி கையகப்படுத்தப்படவுள்ளது. அதன் விரிவான விவரங்கள் பின்வருமாறு

**அட்டவணை**

| வ. எண் | நில அளவை எண் | நிலத்தின் வகை | கையகப்படுத்தப்பட உள்ள நிலத்தின் பரப்பளவு (ஹெக்டேரில்) | எல்லைகள் வ | கி | தெ | மே | கட்டு மானங்கள் | மரங்கள் | நிலத்தின் மீது பற்று இருப்பவரின் பெயரும் முகவரியும் (திருவாளர்கள்) | பதிவு செய்து வைத்துள்ளவர்; |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | | | | (6) | (7) | (8) | (9) |
| | | | | **அலகு–1 (மாதவன்குறிச்சி கிராமம்)** | | | | | | | |
| 1. | 503/3A | புன்செய் | 0.18.90 | 502 | 503/2A1 | 503/1A | 504/3, 520/1A | – | – | பாலமுருகன், த/பெ.ஆபிரகாம் | 1529 |
| | | | | **அலகு–2 (மாதவன்குறிச்சி கிராமம்)** | | | | | | | |
| 2. | 171/2B | புன்செய் | 0.03.64 | 171/2A | 171/2C | 172 | 181/2B2, | – | – | 1. கருப்பத்துரை த/பெ.மகாலிங்க நாடார் 2. விஜயக்குமார் த/பெ.மகாலிங்க நாடார் | 643 |

| வ. எண் | நில அளவை எண் | நிலத்தின் வகை | கையகப்படுத்தப்பட உள்ள நிலத்தின் பரப்பளவு (ஹெக்டேரில்) | எல்லைகள் | | | | கட்டு மானங்கள் | மரங்கள் | நிலத்தின் மீது பற்று இருப்பவரின் பெயரும் முகவரியும் (திருவாளர்கள்) | பதிவு செய்து வைத்துள்ளவர்; |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வ | கி | தெ | மே | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | | | | (6) | (7) | (8) | (9) |
| | | | | அலகு–3 (ஆதியாக்குறிச்சி கிராமம்) | | | | | | | |
| 3. | 409/14 | புன்செய் | 0.00.04 | 384/19 | மாதவன் குறிச்சி | 409/14, 409/15 | 409/13 | – | – | எடிசன் த/பெ.ஜேக்கப் | 1528 |
| **மொத்தம்** | | | **0.22.58** | | | | | | | | |

இந்த அறிவிக்கை 2013–ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச்சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) 11(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் விதிமுறையின் கீழ் தொடர்புடைய அனைவருக்காகவும், வெளியிடப்படுகிறது.

நிலத்தின் திட்டம் குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மற்றும் இஸ்ரோ சிறியரக செயற்கைகோள் ஏவுதள நில எடுப்பு பணிக்காக உருவாக்கப்பட்ட திருச்செந்தூர் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அலுவலகத்திலும் எந்த ஒரு வேலை நாளிலும், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

மேற்சொன்ன சட்டத்தின் 12–ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் வழங்கப்பட்டுள்ளவாறு நிலத்தில் நுழைதல், யாதொரு நிலங்களை அளவெடுத்தல், அடிமண்ணை தோண்டுதல் அல்லது ஆழ்துளையிடுதல் மற்றும் இது தொடர்பான அனைத்து செயல்களையும் முறையாக செயல்படுத்த தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ), இஸ்ரோ சிறியரக செயற்கைகோள் ஏவுதளம் அமைத்தல், திருச்செந்தூர் மற்றும் அவரது பணியாளர்களுக்கு அரசால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

இச்சட்டத்தின் 11(4)–ஆம் பிரிவின் கீழ் யாதொரு நபரும் நிலத்தை விற்பனை செய்தல்/வாங்குதல் போன்ற யாதொரு பரிமாற்றங்களில் ஈடுபடுதல் அல்லது பரிமாற்றங்கள் செய்தல் அல்லது மாவட்ட ஆட்சியரின் முன் அங்கீகாரமின்றி இவ்வறிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து யாதொரு வில்லங்கங்களையும் ஏற்படுத்த இயலாது.

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக இச்சட்டத்தின் 15–ம் பிரிவின் கீழான விசாரணை அறிவிப்பு அவசரநிலை கருதி நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அவசர நிலை கருதி இச்சட்டத்தின் பரிவு 40(1)–ன்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களில் உரிமை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**வி. அருண் ராய்,**
*அரசுச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU